**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண். 2322 /ஆ2/2025, நாள். .07.2025.**

---

**பொருள் :** பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – 2024 – 2025 ஆம் கல்வியாண்டில் அரசு/ அரசு நிதியுதவி பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவர்கள் – மாநில தேசிய மற்றும் சர்வதேச அளவில் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ/ மாணவர்களுக்கு பாராட்டுச் சான்று வழங்குதல் – சார்பாக.

**பார்வை :** தமிழ்நாடு தனியார் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.1992/ஊ2/2025, நாள்.07.05.2025.

-----

பார்வையில் காணும் கடிதத்தின்படி 2024 –2025 ஆம் கல்வியாண்டில் அனைத்து வகை அரசு/ நிதியுதவி / தனியார் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவர்கள் மாநில, தேசிய, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு 22.07.2025 அன்று மாண்புமிகு துணை முதல்வர் மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நல துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் பாராட்டுச் சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற உள்ளது.

அவ்விழாவிற்கு வேலூர் மாவட்டத்திலிருந்து இணைப்பிலுள்ள 28 மாணவர்கள் மற்றும் 30 மாணவிகள் கலந்து கொள்ள உள்ளனர். அவர்களை பாதுகாப்பாக அழைத்துச் செல்வதற்கு இணைப்பிலுள்ள உடற்கல்வி ஆசிரியர்கள் பொறுப்பாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளது. எனவே சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள், மாணவ/ மாணவியர்களை 22.07.2025 அன்று காலை 4.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் வளாகத்திற்கு பாதுகாப்பாக பொறுப்பாளர்களிடம் ஒப்படைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

உடற்கல்வி ஆசிரியர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பேருந்துகளில் மாணவர்கள், மாணவியர்கள் எனத் தனித்தனியாக அழைத்துச் சென்று விழாவில் பங்கேற்று மீண்டும் அழைத்து வந்து சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களிடம் ஒப்படைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு :**

1. உடற்கல்வி ஆசிரியர்களின் பெயர் பட்டியல்.
2. மாணவ/ மாணவியர்களின் பெயர் பட்டியல்.

17.07.2025

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ)
வேலூர்.

17/7/25

**பெறுநர் :**

சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள்.

**நகல் :**

1. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. சென்னை–6, தமிழ்நாடு தனியார் பள்ளிகள் இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்துனுப்பப்படுகிறது.
3. சென்னை –6, முதன்மை உடற்கல்வி ஆய்வாளர் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.
4. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி/ தனியார் பள்ளிகள்) வேலூர் தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
5. வேலூர், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளருக்கு தொடர் நடவடிக்கைக்காக அனுப்பலாகிறது.
6. கோப்பிற்கு.

(பா.க)